## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 522 / 2018**

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமார் | தொழில் | :விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமநாதன் | சமயம் | : |
| கிராமம் | : அனந்தபுரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 59 |

தேதி 23.01.2023

சாட்சியையும் எதிரிகளையும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியராஜ் Gr.1 - 1082 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் அனந்தபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 மீனாட்சி என் மகள். ஆஜர் எ திரிகளை தெரியும்.

2. நான் அனந்தபுரத்தில் காய்கறி கடை வைத்திருக்கிறேன். கடந்த 28.05.2015 ல் மாலை 4.00 மணிக்கு எனது மகள் மீனாட்சியை கடையில் விட்டுவிட்டு தாக்காளி வாங்குவதற்காக வெளி ஊர் சென்றேன். நான் 2. கி.மீ கடந்து இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது எனது மகள் மீனாட்சி போன் பன்னி உடனே கடைக்கு திரும்பி வருமாறு சொன்னார். என்னம்மா என்று நான் கேட்டேன். திரும்ப வருமாறு சொன்னார். நானும் உடனே திரும்பி கடைக்கு சென்றேன். அப்போது என் மகள் கடையில் 2 பேர் வந்து காய்கறி வாங்கிகொண்டு காசு கேட்டதற்கு இளங்கோ என்பவர் ஏய் தேவிடியா என் கிட்டையே காசு கேட்கிறாய் என்று கூறி என் மகளின் மேல் துப்பட்டாவை இழுத்து கீழே போட்டுவிட்டார் என்றும், இளங்கோவுடன் உடன் இருந்த ராஜேந்திரன் குச்சகாரி, வெள்ளாரஒழி என்று திட்டி என் மகளின் கையை பிடித்து இழுத்தார் என்றும் சொன்னார். மேற்படி இளங்கோவன், ராஜேந்திரன் ஆகியோர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரிகள் என்பதை தெரிந்துகொண்டேன்.

3. என் மகளிடம் பிரச்சனை செய்தவரை கண்டறிய என் மகளை

அழைத்துகொண்டு தேடிப்பார்த்ததில் சற்று தூரத்தில் உள்ள பேரூந்து நிறுத்ததில் ஆஜர் எதிரிகள் இருவரும் நின்று கொண்டிருந்ததை என் மகள் அடையாளம் காட்டினார். அவ்வாறு என் மகள் மீனாட்சி தமது இடம் பிரச்சணை செய்த ஆஜர் எதிரிகளை பேரூந்து நிறுத்தத்தில் வைத்து அடையாளம் காட்டும்போது இளங்கோவனும், ராஜேந்திரனும் டேய் தேவிடியா பையா, உன்னையும் உன் மகளையும் வெட்டிபோட்டு விடுவேன் என்று மிரட்டினார்கள்.

4. அதன் பிறகு அந்த இருவரையும் பெயர், ஊர் தெரிந்து கொண்டு அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காடட்டப்டும் புகார்தான் அது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள். (**28.05.2015 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**)

**குறுக்குவிசாரணை**:

5.. இந்த வழக்கிற்கு முன்பாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன். எத்தனை வருடமாக வருகிறேன் என்றால் சுமார் 10 வருடமாக வருகிறேன். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அ.சா. ஆ.1 புகாரை நான் எழுதினேனா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். புகார் எழுதியவர் பெயர் எனக்கு தெரியவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரில் நான் நேரில் பார்த்தது போல் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. போனில் கேட்டதை புகாரில் எழுதியுள்ளேன்.

6. நான் சம்பவத்தை நேரில் பார்க்காத போது நேரில் பார்த்தது போல் வாசம் கண்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போனில் கேட்டதைதான் புகாரில் எழுதியுள்ளேன். 2. கி.மீ தூரத்திற்கு சென்றதாக எனது சாட்சியத்தில் கூறிய நிலையில் எந்த ஊரில் சென்றியிருந்தேன் என்றால் செஞ்சிக்கு செல்வதற்காக வரிக்கல்லில் இருந்தேன். நான் நடத்தும் கடை மக்கள் நெருக்கமாக உள்ள பஜாரில் உள்ளது என்றால் சரிதான். எனது கடையில் இருந்து எவ்வளவுதூரத்தில் அனந்தபுரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சுமார் 300 மீட்டர் தூரத்தில் உள்ளது . நான் கூறுவது போல் சம்பவம் நடந்திருந்தால் அந்த பகுதியில் இருந்தவர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்திருப்பார்கள் என்றால் அவ்வாறு யாரும் தகவல் கொடுக்கவில்லை. நடக்காத சம்பவத்தை நடந்ததாக என் மகள் என்னிடம் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் ஊரில வந்து அக்கம் பக்கத்தில் நடந்ததை

விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அக்கம்பபக்கத்தில் உள்ளவர்கள் வந்து திட்டி இங்க என்ன வேலை என்று கேட்டதனால்தான் அங்கு இருந்து சென்றியிருக்கிறார்கள். கடையில் காய் வாங்க வந்தவர்களையும் ஆஜர் எதிரிகள் திட்டியுள்ளார்கள். எவ்வளவு தொகைக்கு காய்கறிகள் வாங்கினார்கள் என்றால் அது சம்மந்தமான விவரங்கள் நினைவு இல்லை.

7. எவ்வளவு தொகை என்பது குறித்து என் மகளிடம் கேட்டேனா என்றால் என் மகள் சொன்ன பிரச்சணையைதான் கேட்டே,ன். நான் சில்லரை வியாபாரம்தான் செய்கிறேனா என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகள் எனது கடையில் மொத்தமாக 60 ரூபாய்கு காய்கறிகள் வாங்கினார்கள் என்றும், அதில் 1/4 கிலோ கேரட்டின் விலை 40 ரூ. என்றும் மற்ற காய்கறிகளின் விலை 20 ரூ. என்றும் சேர்த்து வரும் கூடுதல் தொகை 60 ரூ. என்றும் நான் கேட்காத கேரட்டை ஏன் எனக்கு கொடுத்துவிட்டு பணம் கேட்கிறாய் என்று ஆஜர் எதிரிகள் கேட்டதற்கு என் மகள் டேய் நாய் 60 ரூ. க்கு காய் வாங்கிவிட்டு அதற்கு கணக்கு கேட்கிறாயா என்று திட்டியதாக ஆஜர் எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் கூறியவாறு துப்பட்டா இழுத்ததாகவும், அசிங்கமாக திட்டியதாகவும், எங்களை கொலைமிரட்டல் விடுத்ததாகவும் நான் கூறி இருப்பது பொய் என்று ஆஜர் எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல.

8. பிரச்சணைக்கு முன்னதாக ஆஜர் எதிரிகள் என்னிடம் காய்கறிகள் வாங்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. 15 வருடமாக என் கடையில் ஆஜர் எதிரிகள் காய் கறி வாங்கி வருகிறார்கள் என்றால் அவ்வாறு 15 வருடமாக காய்கறி வாங்க வரவில்லை. என் போனில் என் மகள் நடந்த விவரத்தை சொன்னரா என்றால் 2 நபர்கள் பிரச்சணை செய்கிறார்கள் உடனே வா என்றுதான் சொன்னார். நான் விசாரித்ததில் ஆஜர் எதிரிகள் என்ன சமூகத்தை சார்ந்தவர்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர்எ திரிகள் எங்கள் கிராமத்தை சேர்ந்தவரா என்றால் பக்கத்து ஊர் சிற்றசூர் சேர்ந்தவர். என் ஊர் அனந்தபுரம். சிற்றசூருக்கும் அனந்தபுரமும் , அனந்தபுரம் பஞ்சாயத்தின் கீழ் உள்ளது.

9. என் மகள் சொன்ன பிறகு நேரடியாக காவல் நிலையத்திற்கு போகவில்லை என்றால் போகவில்லை. நான் நேரடியாக காவல் நிலையத்திற்கு செல்லாமல் ஆஜர்எதிரிகள் என் மகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிடுவார்களோ என்று தேடி நாங்கள் சென்றதாக ஆஜர் எதிரிகள்

கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலைத்திற்கு எதிரில் பஸ்டாப் உள்ளதா என்றால் இல்லை. நான் நடத்தும் கடைக்கு எதிரில் பஸ் நிறுத்தம் உள்ளது. ஆஜர் எதிரிகளை காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள டீ கடையில் நான் பார்த்தேன் என்றால் இல்லை. என் கடையில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ள செஞ்சி ரோட்டில் பஸ்டாப்பில் ஆஜர் எதிரிகள் நின்று கொண்டியிருந்தார்கள்.

8. எனக்கு எதிராக ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக புகார் கொடுத்துவிடுவார்களோ என்று பயத்தில் தாமதமாக நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அங்கு இருந்தவர்கள் எதிரிகளை திட்டியதாக நான்கூறுவது உண்மை அல்ல என்றால் சரியல்ல. அங்கு இருந்தவர்கள் வயதான ஆஜர் எதிரிகளை ஏன் திட்டுகிறீர்கள் என்று மகளிடம் கேட்டார்கள் என்றால் அது பொய். நான் கூறுவதுபோல் வயதுடைய என் மகளிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்திருந்தால் அருகில் இருந்தவர்களே பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பார்கள் என்றால் அருகில் இருந்தவர்களை ஆஜர் எதிரிகளை ஏன் இப்படிசெய்கீறிர்கள் என்று கேட்டபோதுதான் அங்கு இருந்து தப்பித்து பஸ் டாப்பிற்கு சென்று விட்டார்கள். எனக்கு எதிராக ஆஜர் எதிரிகள் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை.

9. எனக்கு எதிராக ஆஜர் எதிரிகள் புகார் கொடுக்காததற்கு என் மகள் பெண் என்பதாலும், படித்த பெண்ணாக இருப்பதாலும் புகார் கொடுக்காமல் இருப்பதாக எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் பொய்யாக சொல்கிறார்கள். புகார் கொடுத்த பின்பு போலிசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என் மகளையும், காவல்நிலையத்தில் வைத்து விசாரித்ததார்களா என்றால் ஆமாம். போலிசாரிடம் சம்பவத்தை பார்த்தவர்கள் என்று யார் பெயரையாவது சொன்னிர்களா என்றால் சம்பவம் நடந்த போது உடன் இருந்து பார்த்தவர்களை சொல்லியுள்ளேன். என் கடைக்கு எதிரில் மாலைக்கடையும், டீக்கடையும், ஜுஸ்கடை உள்ள நிலையில் அவர்களை சாட்சிகளாக சொல்லவில்லையா என்றால் அவர்கள் சம்பவம் நடந்தது உண்மைதான். போலிஸ் ஸ்டேசனுக்கு சாட்சி சொல்ல எங்களால் வரமுடியாது என்று சொன்னார்கள். என் மகள் ஆஜர் எதிரிகளை தரக்குறைவாக பேசியதால்தான் அக்கம்பக்கத்தில் உள்ளர்வர்கள் சாட்சி சொல்ல முன் வரவில்லை என்றால் சரியல்ல. என் மகளுக்கு ஆதரவாக பொய்யான புகார் கொடுத்து பொய்

சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.